அந்த அளவிற்கு மின் பளு தற்போது இல்லை. தேவையிருப்பின், எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

தார்ச்சாலை

***26700—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், களபம் ஊராட்சி, களபம் முதல் அதவத்தூர் வரை தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், களபம் ஊராட்சி, களபம் முதல் அதவத்தூர் வரையிலான 9.56 கிலோ மீட்டர் நீளச் சாலையில், இதுவரை 8.80 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.*

திரு. ஏ. இரத்தினசபாபதி: *'மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம், மாணிக்கக் கோயிலடா' என்ற மாணிக்கத் தலைவரின்*

மணி வார்த்தைகளுக்கு மகுடம் சூட்டிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்தத் தலைவரோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத ஒப்புயர்வற்ற தலைவராகிய பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களே, எத்தனையோ திட்டங்களை நான் கேட்காமலேயே அறந்தாங்கிக்கு அள்ளி வழங்கிய தங்களுக்கு, இந்தச் சாலை வசதியையும் ஏற்படுத்தித் தருவதாகச் சொன்ன தங்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத வேறு ஒரு பிரச்சினையை உங்களிடம் எடுத்து வைக்கின்றேன். என்னுடைய அறந்தாங்கி நகரத்தில் செவ்வாய்க் கிழமைதோறும் வாரச் சந்தை நடைபெறுகின்றது. அது பிரசித்தி பெற்ற சந்தை. இந்த ஆண்டுகூட 50 இலட்சம் ரூபாய்க்கு அந்தச் சந்தை ஏலம் போயிருக்கின்றது. ஆனாலும், அதனால் எந்தப் பயனும் அறந்தாங்கி தொகுதிக்கோ, அறந்தாங்கி நகராட்சிக்கோ கிடையாது. காரணம், அது அமைந்திருக்கின்ற இடம் தஞ்சை மாவட்டத்தினுடைய சத்திரம் நிருவாகத்திற்கு உட்பட்ட இடம். அதனால், அனைத்து நிதியும் அவர்களுக்குச் சென்று விடுகிறது. தஞ்சை மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அந்த நிருவாகத்திற்கு தலைவர். நான், அவரைச் சந்தித்து, அந்த இடத்தை எங்களுடைய அறந்தாங்கி பேருந்து நிலையத்தினுடைய விரிவாக்கத்திற்குத் தர வேண்டுமென்று கேட்டேன். 'எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால், அந்தச் சந்தையை வேறு இடத்திற்கு மாற்றி, அந்தச் சந்தையினுடைய வருமானம் எங்களுக்குத்தான் வர வேண்டும்' என்று அவர் சொன்னார். எனவே, இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, அதில் வருகின்ற வருமானத்தையும் எங்களுடைய அறந்தாங்கி நகராட்சிக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சத்திரம் நிருவாகத்திற்குச் சொந்தமான அந்த இடத்தையும், பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப அறந்தாங்கி பேருந்து நிலையத்தினுடைய விரிவாக்கத்திற்கு பெற்றுத் தர வேண்டுமாய், உங்களிடம் அன்புடன் கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது என்று அவரே சொல்லிவிட்டார். மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், அந்தத் தொகுதியினுடைய கோரிக்கையாக உள்ளது. வாரச் சந்தை, தஞ்சை மாவட்டத்தின் சத்திரம் பகுதியைச் சேர்ந்தது என்று சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு பகுதியிலும் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் வருமானம் வரும்போது, அந்தந்தப் பேரூராட்சிக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குத்தான் அந்த வருமானம் போக வேண்டுமென்பது விதி. இருந்தாலும்கூட, அந்த இடத்தை பேருந்து நிலையத்திற்குக் கேட்டிருக்கின்றார். பேருந்து நிலையத்திற்கு அந்த இடத்தைக் கொடுக்கும்பட்சத்தில், வாரச் சந்தைக்கு உறுப்பினருடைய நகராட்சிப் பகுதியிலே இடத்தை தேர்வு செய்து அந்த இடத்திற்கு வாரச் சந்தையை மாற்றினால், வருமானம் உறுப்பினருடைய நகராட்சிக்கு வந்துவிடும். அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு இடம் இருக்குமானால் கண்டிப்பாக பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்

65—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***9897—திரு. பி.என்.பி. இன்பசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஏரியூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS